# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVANNAMALAI.

**MCOP . No. 762/2022 and 763/2022**

**RW1**

Name : புட்டப்பா

Father's Name : சீனப்பா

Village :

Taluk : சிமோகா

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 24.07.2025.

**முதல் விசாரணை**

நான் இம்மனுவில் மனுதாரர் ஆவேன் . எனது தரப்பு சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் உண்மை என்றும், அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான் என்றும் உறுதியிட்டு கூறுகிறேன். கீழ்க்கண்ட ஆவணங்களை எனது தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

1. நான் பாச்சல் காவல் நிலையத்திற்கு பதிவு தபால் மூலம் 21.06.2019 தேதியில் அனுப்பிய புகாரின் நகல் **எ.ம.சா.ஆ.1.**

**மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

இந்த விபத்து 13.06.2019 அன்று மாலை 5.15 மணிக்கு நடந்தது . பேருந்து திருவண்ணாமலை பேருந்து நிறுத்தத்தில் இருந்து 5 மணிக்கு கிளம்பியது . நான் KA14F0020 என்ற பதிவு எண் கொண்ட கர்நாடகா அரசு பேருந்தை ஓட்டினேன் என்றால் சரிதான். அந்த பஸ்ஸில் நடத்துனர் இருந்தார். பேருந்தில் சுமார் 35 பயணிகள் இருந்தார்கள். கர்நாடகா அரசு பேருந்து ஒரு நபரின் வாகனத்தின்மீது மோதி விபத்து ஏற்பட்டுவிட்டால் இழப்பீடு வழங்குவோமா என்று கேட்டால் பஸ் ஓட்டுநரின் மீது தவறு இருந்தால் இழப்பீடு வழங்குவோம். அரசு பேருந்து நிறுவனம், சிமோகா கோட்டம் இறந்த

நபரின் கணவர் சம்பத் என்பவருக்கு ரூ. 50,000/- இழப்பீடு வழங்குவதாக கடிதம் அனுப்பியுள்ளார்கள் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. எனக்கு முன்னால் சென்ற இருசக்கர வாகனத்தை பேருந்து மோதியதால்தான் விபத்து ஏற்பட்டதா என்றால் இல்லை. நான் சென்ற பேருந்தின் எதிரே ஒரு லாரி வந்தது. அந்த லாரிக்கு பின்னால் இருக்கரவாகனம் சாலையை கடந்து செல்ல முயன்றபோது இந்த விபத்து நடந்தது. நான் ஓட்டிச்சென்ற பேருந்து இருசக்கர வாகனத்தை தொடவே இல்லை. இருசக்கர வாகனத்தில் வந்தவர்களே விழுந்துவிட்டார்கள். நான் ஓட்டிய பேருந்தை மோட்டார் வாகன ஆய்வுக்கு எடுத்து சென்றார்கள். அந்த சமயத்தில் பேருந்தில் எந்த சேதமும் இல்லை. மோட்டார் வாகன ஆய்வு அறிக்கையில் பேருந்தின் முன் இடது பக்க முகப்பு விளக்கு உடைந்ததாகவும், இடது பக்கத்தில் ஒரு பெண்ட் இருந்ததாகவும் குறிப்பிட்டுள்ளார்கள் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. என் மீது போலிசார் வழக்கு பதிவு செய்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியும். நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். அதை இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை. என் மீது இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டு செங்கம் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் வழக்கு நடந்து வருகிறது என்றால் சரிதான். விபத்திற்குள்ளான இருசக்கர வாகனம் ஒரு கிளை சாலையில் இருந்து பிரதான சாலைக்குள் நுழைந்தது. என்னுடைய அஜாக்கிரதையால்தான் இந்த விபத்து நடந்தது என்று சொன்னால் சரியல்ல.

Taken down by me in Open Court read over of the witness and to acknowledged by him/her as correct.

**Sd/- B.C.Gopinath**
Additional District Judge,
Tiruvannamalai.